# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2342/09 - 2023 ජූලි මස 24 වැනි සඳුදා - 2023.07.24

*2342/09 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 இலக்க விளையாட்டுச் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பிரிவு 32, பிரிவு 33 மற்றும் பிரிவு 41 இன் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகள்*

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பிரிவு 32, 33 மற்றும் 41 ஆம் பிரிவுகள் மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2023, யூலை 24 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரும்வகையில் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிருவாக மற்றும் தேவையான ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், அதற்கான தேர்தலை கூட்டி நடத்துவதற்கும் பின்வரும் குழுவை நியமித்துள்ளேன்.

(1) திரு. A. G. C. தேசப்பிரிய - தலைவர்

(2) திருமதி. N. K. கபுருபண்டார - செயலாளர்

(3) திரு. K. A. R. C. கஹந்தவல - பொருளாளர்

மேலும், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 32, 33 மற்றும் 41 மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில். 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய சங்கங்களுக்கான விளையாட்டு

ஒழுங்குமுறைகள் மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு பின்வருபவை பொருந்தும் என்று நான் இதன் மூலம் கட்டளையிடுகிறேன்.

*(1)* செயற்குழு உத்தியோகத்தர்கள் நான்கு வருட காலப்பகுதிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

*(2)* பொதுச் செயலாளர்/CEO பதவி நியமனம் மூலம் நிரப்பப்படும்.

*(3)* 2022 செத்தெம்பர் 22 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பின் அடிப்படையில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்படும்.

**றொஷான் ரணசிங்க** (பா. உ),
விளையாட்டு மற்றும் இளைஞர்
விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூலை 24.*

EOG 07 - 0230